Registered as a News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 23    (05 - 06 - 1992)    வெள்ளிக்கிழமை    ஓசை: 108

## தேர்தல்தொகுதிஎல்லை மீள் நிர்ணயம் ஆரம்பம்

தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை மீள நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி. சில்வா இந்த எல்லை நிர்ணயம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் பிரகாரம் அரசியல் கட்சிகள் (8ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ நடவடிக்கை நிறுத்தம்

# பாரிய உயிரிழப்பின் விளைவு

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக முப்படை செயலக பேச்சாளரான கேணல் சரத் முனசிங்கா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேசமயம் வடக்கில் இராணுவத்தினர் சந்தித்த பாரிய உயிரிழப்புகள் காரணமாகவே அரசாங்கம் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒருவாரமாக யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவிலும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது 86 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 200 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

முப்படைகளின் உதவியுடன் மேற்கொண்ட இவ்விரு நடவடிக்கைகளின் போதும் இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இரு பகுதிகளில் பெரும்படை எடுப்பை நடாத்துவதன்மூலம் புலிகளைக் குழப்பமடையச் செய்து, புலிகளுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தலாம் என்ற (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை
கோமளன்

01-06-1992 அன்று முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை கோமளன் (சபாரட்ணம் சுரேஸ்குமார், 1 ஆம் கண்டம், பன்குளம், திருக்கோணமலை) என்னும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.



வீரவேங்கை
ஜீவராணி

02-06-1992 அன்று முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் [8 ஆம் பக்கம் பார்க்க]

## சிலாவத்தைபகுதியிலிருந்து இராணுவம் வெளியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி சிலாவத்தை, மூன்றாம், நாலாம் கட்டை ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இப்பொழுது அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

ஐந்தாம் ஆறாம் கட்டைப் பகுதியிலிருந்து அலம்பில் பக்கமாக இவர்கள் நிலைகொண்டுள்ளனர்.

இராணுவத்தினர் வெளியேறிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை துப்பரவு செய்தபோது இரா (8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயரதிகாரிகள் பதவிக்காலம் நீடிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஆறு சிரேஷ்ட அதிகாரிகளின் பதவிக்காலத்தைச் சிறிலங்கா ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமாகிய ஆர். பிரேமதாசா நீடித்துள்ளார்.

இது குறித்த செய்திகளைக் கொழும்புப் பத்திரிகைகள் நேற்று வெளியிட்டிருந்தன. அத்துடன் பதவி உயர்வும் அளிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கான உத்தரவையும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் பிரேமதாசாவே இட்டுள்ளார் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

## சிறிலங்கா ஜனாதிபதியை கொலை செய்ய முயன்றார்

### மாகாண சபை உறுப்பினர் கைது

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் வடமத்திய மாகாண சபையின் உறுப்பினர் ஒருவரும் அவருக்குத் துணையாகசெயல்பட்ட மற்றொருவரும் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

அந்த அரசியல்வாதியின் மெய்ப்பாதுகாப்பாளர், ஆசிரியர் ஒருவரை, ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொலை செய்யும்படி கேட்டுக் கொண்டார் என்ற குற்றத்தின் பேரிலேயே அரசியல்வாதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல்வாதி, ஆசிரியர் பற்றிய பெயர் விபரங்களை அரசு வெளியிடவில்லை.

## இராணுவத்தின் வேட்டிற்கு இராணுவ பொலிஸ் பலி

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ சோதனை நிலையங்களைகண்காணிக்கும் இராணுவ பொலிஸ்காரர் ஒருவர் சோதனை நிலையம் ஒன்றில் கடமையில் நின்ற இராணுவ சிப்பாய் ஒருவரினால் சுடப்பட்டுமரணமானார்.

கடந்த வெள்ளி இரவு மாமடுவ வீதியில் அமைந்த சோதனை நிலையத்தில் கே. ஜயவீர என்ற பிரஸ்தாப இராணுவபொலிஸ்காரர்சோதனை நிலையங்களை சோதித்துக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.(சா.)பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்

இவ்வாண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இப் பரீட்சையில் ஒருபாடத்துக்கான கட்டணம் 15 ரூபாவும் இரண்டு பாடங்களுக்கு 20 ரூபாவும் மூன்று பாடங்களுக்கு 25 ரூபாவும் நான்கு பாடங்களுக்கு 30 ரூபாவும் ஐந்து பாடங்களுக்கு 40 ரூபா (8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்நகரில் இன்று மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசபடையினர் பொதுமக்களின் குடியிருப்புக்கள், வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், அகதி முகாம்கள், வைத்தியசாலைகள் போன்றபொதுமக்களின் இலக்குகள் மீதுநடாத்திவரும் குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்து யாழ். நகரில் இன்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெற உள்ளது.

வர்த்தகசங்கங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் தொண்டர்கள் இணைந்து காலை 9.00 மணியளவில் கொக்குவில் சந்தியில் இருந்து ஊர்வலத்தை ஆரம்பிக்க உள்ளனர். இவ் ஊர்வலம் காங்கேசன்துறை வீதி கட்டூத்தெரு சந்தியூடாக நல்லை ஆதீனத்தை வந்தடைந்து அங்கு மதஸ்தாபனங்களின் தொண்டர்களுடன் இணைந்து செஞ்சிலுவைச் சங்கத்தை அடையும்.

அதேவேளைகடற்பிராந்திய வெகுஜன அமைப்புக்களின் தொண்டர்கள் குருநகரில் இருந்து ஊர்வலமாக செஞ்சிலுவைச்சங்கத்தை அடையும். இவ் அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் யாழ். செயலகத்தை நோக்கிச் சென்று யாழ் அரசஅதிபரிடமும் மகஜர்ஒன்று கையளிக்கப்படும்.

இக் கண்டனப் பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு பல்வேறு மதஸ்தாபனங்களும் தொழிற் சங்கங்களும் அழைப்பு விடுத்திருக்கின்றன.

இந்து மதக்குருக்கள் ஒன்றியம், யாழ். ஆயர் இல்லத்தின் சார்பாக யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை மற்றும் நல்லை (8 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் முஸ்லிம்களின் அட்டூழியம் வர்த்தகர்கள் மகஜர்

(வாழைச்சேனை)

வாழைச்சேனைப் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் ஊர்காவல் படையினரால் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்கள், அங்குள்ள தமிழ் வர்த்தகர்கள் வியாபாரம் செய்ய முடியாமல் கொள்ளையடிக்கப்படும் நிலைமைகள் பற்றி அங்குள்ள வர்த்தகர்கள் ஜனாதிபதிக்கு மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது வாழைச்சேனை காகித தொழிற்சாலைப் பகுதியில் விறகு வெட்டப் போன பன்னிரண்டு தமிழ் மக்களுக்கு (8 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## மீண்டும் புதிதாய் பிறப்போம

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது "சோதனைகள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தாலும் மனம் தளராத இந்த மண்ணின் மைந்தர்களின் கதை" (2625)

## நீமியா உரம்

நீமியா உரம் பயிர் பாது காப்புக்கும் அதிக விளைச்சலுக்கும் உதவுகிறது. கிலோ ரூபா 15/- ,20 கிலோ ரூபா 260/- அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம் (சி/ 4505)

## மலைவேம்பு விதை

மலைவேம்பு விதை தேவை மில்க்வைற், யாழ்ப்பாணம் (சி/ 4506)

## தவறிவிட்டது

பொ. சபாரெத்தினம் என்பவருடைய அடையாள அட்டை போக்குவரத்து அனுமதிச்சீட்டு, மண்மீட்பு நிதி பற்றுச்சீட்டு என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2639)

## ஏ.பி.சி நிருபர்கள் யாழ் வந்தனர்

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமான ஏ.பி.சி யைச் சேர்ந்த மூன்று நிருபர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த இம்மூவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களுடன் நேற்று முன்தினம் பேசியதாகத் தெரியவருகின்றது. (75)

# வாகன வரிசை விபரம் 04 06. 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் 4170, சோதனை நிலையத்தைத் தாண்டிச் சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம் 3275, இராணுவம் அனுமதித்த வாகன வரிசை இலக்கம் 3264.

இராணுவம் அனுமதித்து வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

36-5707, 26-8223, 24-5461, 36-779, 25-6837 27 8754, 25-7420, 28-1749, 41-9530, 36-1100 36-8284 36-3397, 36-949 25-6802, 27-2084, 25-9715. 36-2837 125-9340, 42-0706, 42-0849

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

27-9756, 27-3845 42-3732, 42-1721, 26-2745, 42-3426, 27-6762, 26-3473, 24-2714, 42-0517 26-5071, 28 9449, 24-2161

இவற்றுடன் 21 சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனங்களும் உள்ளே வந்துள்ளன.

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகன வரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கட்டம் கட்டமாகவே 4000 ரூபா கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொழில் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினருக்கு வழங்கப்பட இருக்கும் நாலாயிரம் ரூபா கட்டம் கட்டமாகவே வழங்கப்பட இருக்கிறது.

இதற்குத் தேவையான பணம் ஒரே முறையில் வழங்குவதற்கு திறைசேரி மறுப்புத் தெரிவித்துள்ளது இதனாலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (ஈ)

# புனர்வாழ்வு குறித்து அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் குறித்து புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களைப் புனரமைத்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாகவே மேற்படி அறிக்கை அமைந்துள்ளது.

புனரமைப்பு வேலைகளுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் இன்மையால் அனைத்து புனரமைப்புவேலைகளையும் மேற்கொள்ள முடியத நிலை தொடர்ந்து நிலவுகிறது அதேவேளை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் தொடர்பாக பூரண மதிப்பீடுளதுவும் மேற்கொள்ள முடியாதநிலையும் உள்ளது.

கடந்த மாத இறுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பாகக் கொழும்பில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இம்மாவட்டத்தின் மேற்படி நிலைமைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வறிக்கையைப் பரிசீலித்த மேற்படி அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்ட சில புனரமைப்புவேலைகளை மட்டுமே மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

சுகாதார மகளிர் விவகார அமைச்சினால் கோரப்பட்டிருந்த வார்ட் லிகிதர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், வெளிக்கள உதவியாளர்கள் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு வடக்கு-கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத் திகதி கடந்த முதலாம் திகதி என அறிவிக்கப்பட்டபோதிலும் வடக்கு-கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு உரிய நேரத்தில் தகவல் கிடைக்கச் சாத்தியமில்லை என்பதை சுகாதாரப் பணிப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டோவுக்குச்சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இவ் விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். சகல வர்த்தக ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


# சகல பொதுச் சபை பிரதிநிதிகளுக்கும் விசேட பொதுக் கூட்டம் 28 - 6 - 1992

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை எதிர் வரும் 28-6-1992 ஆம் திகதி நடாத்த இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது எனவே பொதுச்சபை பிரதிநிதிகள் தங்களுடைய தற்போதைய விலாசத்தை செயலாளர், புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ. சங்கம், இல 201/1, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் காலக்கிரமத்தில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

செயலாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி/4518)

# வரவேற்கிறோம்

லண்டனில் பிரசுரமாகும் தமிழ், ஆங்கில, விஞ்ஞான சஞ்சிகைக்கு கதை, கட்டுரை, கவிதை சிறுநாவல் வரவேற்கப்படுகின்றன.

தாயக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

தரமான ஒவ்வொரு ஆக்கத்திற்கும் ரூபா 400 பரிசளிக்கப்படும்.

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

*ALAI OSAI PUBLICATIONS*
*109 PHILIP LANE,*
*TOTTENHAM,*
*LONDON N15 4JR.*

(சி/4517)


# நினைவு கூருகின்றோம் ... 1992-06-05

1974 ஆம் ஆண்டு இதே தினத்தில் கோப்பாயில் சிறிலங்கா காவல் துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது - முதன் முதலாக - சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய - தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான -

**சிவகுமாரன்** (பொன்னுத்துரை சிவகுமாரன் உரும்பராய்)

1985 ஆம் ஆண்டு திருகோணமலை மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 70 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் காணாமல் போன 3 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **தவராசா தவேந்திரன்** (ஏறாவூர், மட்டக்களப்பு)

திருக்கோணமலையில் தம்பலகமம், 13-ம் கட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 20 தமிழர்கள்.

பூசா தடுப்பு முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

அல்லாய் தெற்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட 8 குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 22 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பரந்தனில் தேச விரோத சக்திகளுடனான மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கோணேஸ்** (ஆறுமுகம் கோணேஸ்வரன் - புளியம்பொக்கணை, கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு புத்தூர் - சண்டிக் காட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நேரு** (செ இளையப்பா ஜீவகுமார் சிறுப்பாய், அச்சுவேலி.)

**லெப். குட்டி** (துரைரட்ணம் சிவனேசன் - நவக்கிரி, புத்தூர்.)

இதே சுற்றிவளைப்பின்போது இந்தியப் படையினரால் சுடப்பட்டும், உயிரோடும் எரிக்கப்பட்டும் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

வரணியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். சங்கிலி** (சங்கரப்பிள்ளை மகேந்திரலிங்கம் - மயிலிட்டி)

**2-ம் லெப் கருணன்** (கருணானந்தம் - அச்செழு)

**உமைநேசன் / சார்** (பெனான்டோ அன்ரனி சாம் போல் - திலீபன்நகர், பழைய வாய்க்கால், மிருசுவில்.)

**ஆசாத்** (பரீத் ஆசிர் - சிவன்கோவிலடி, சாவகச்சேரி)

மட்டுவிலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பாலன்** (சின்னத்தம்பி கலாறாஜன் மட்டுவில் வடக்கு)

மானிப்பாயில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரிமாணவன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கொம்மாதுறைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் வந்தாறுமூலைச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலின்போது அருகிலிருந்த வீடு சேதமுற்றதில் கொல்லப்பட்ட ஜெயந்தி நகரைச் சேர்ந்த இளம்தாய், மகள்.


ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4508)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



அன்று பரஞ்சோதி வீடு வழமைக்கு மாறான பரபரப்பில் இருந்தது. காலையில் ரியூசனுக்கு என்று சென்ற பரஞ்சோதியைக் காணவில்லை எனினும் காணவில்லை என்பதற்காக அவனைத்தேட வேண்டிய அவசியம் அவனது வீட்டாரிற்கோ அல்லது அயலவர்களிற்கோ இருக்கவில்லை ஏனெனில் அந்தச் சின்னஞ் சிறிய கிராமத்தில் ஒரு இளைஞனைக் காணவில்லை என்றால் அவன் எங்கே சென்றிருப்பான் என்பது அந்த ஊராருக்கு நன்கு தெரியும்.

ஆமாம். ''பரஞ்சோதி இயக்கத்திற்கு போய் விட்டான்'' அந்த ஊர் முழுவதும் ஒரு சில நாட்கள் அடிபட்ட வார்த்தை அது இயக்கத்திற்கு போவது என்பது அந்த ஊரைப் பொறுத்த வரையில் ஒரு ஆச்சரியமான விடயமாக இருக்கவில்லை ஆனால் பரஞ்சோதியை நன்கு அறிந்தவர்களுக்கு!! ... ஆம் அவன் இயக்கத்திற்குப் போவான் என்று அவனது வீட்டாரோ. நண்பர்களோ அல்லது அந்த ஊரில் அவனை அறிந்த எவருமோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அவன் மிகவும் மென்மையானவன். 8 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் பருவத்தில் கூட தாயின் மடியில் தவழும் அளவிற்குகுழந்தைத்தனம் மிக்கவன். பாடசாலை விட்டால் வீடு என்று கணநேரமும் வீட்டை விட்டே பிரிந்து இருக்காதவன். அப்படியான குழந்தைத்தனம் மிக்கவன்; பந்த பாசங்களைத் துறந்து, தாய் தந்தையைப் பிரிந்து இளவயதின் இன்பங்களையெல்லாம் மறந்து எப்படித்தான் இயக்கத்தில் இணைந்துகொண்டானோ!! அது இயற்கையின் நியதியாகவோ அன்றி காலத்தின் கட்டாயமாகவோ இருந்திருக்கலாம்.

ஆனாலும் யதார்த்தம் என்னவென்றால், மென்மையுள்ளம் கொண்டவர்கள்தான் போராளிகளாக மாறுகின்றார்கள் ஏனென்றால் அவர்களால்தான் அடக்கு முறைகளையும் அடிமைத்தனங்களையும் பொறுக்க முடிவதில்லை. போலும், தனது சக போராளியின் பிரிவினைத் தாங்க முடியாமல் ஒரு போராளி அழுவதனைப் பார்த்து நான் ஆச்சரியம் அடைந்திருக்கின்றேன். அது சாத்தியமா என்று சிந்தித்திருக்கின்றேன் அதற்கு நான் கண்டபதில் ஒரு போராளியின் மனம் மென்மையானது என்பதுதான்.

ஒரு சாதாரண மனிதன் போராளியாகின்ற பொழுது அவன் எவ்வாறு மாற்றமடைகின்றான் அல்லது மாற்றப்படுகின்றான் என்பதற்கு உதாரணமான பல போராளிகளில் பரஞ்சோதியும் ஒருவன் வீட்டில் இருந்த பொழுது அவனிடம் காணப்பட்ட குழந்தைத்தனங்களையும் விளையாட்டுப் புத்தியினையும் அவன் இயக்கத்திற்கு வந்து பயிற்சி எடுத்ததில் இருந்து அவன் வீரமரணம் அடையும் வரை அவனிடம் காணவே முடியவில்லை. அவனது இயக்க வாழ்க்கைவரலாறு மிகவும் குறுகியதாக அமைந்து விட்ட போதிலும் அந்த குறுகிய காலத்திற்குள்ளேயே அவன் இயக்கத்தில் ஒரு நற்பெயரையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தான் என்றால் அதற்கு காரணம் அவனது திறமையும், விசுவாசமும், ஒழுக்கமும்தான்.

தனது போராட்ட வரலாற்றின் ஆரம்ப நாட்களை திருகோணமலையில் ஆரம்பித்த பரஞ்சோதி பின்னர் யாழ்ப்பாணம் வந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதில் இணைக்கப்பட்டான் அதன் பின்னர் தனக்கு கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது திறமையினை முழுமையாகக் காட்டினான். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினால் ஓமந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலில் பங்குபற்றியவர் என்ற பெருமை பரஞ்சோதியையும் சாரும். அதனைத் தொடர்ந்து பூவரசங்குளப் பகுதியில் இருந்து மன்னார் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரோடு நடந்த பாரிய தாக்குதலிலும் அத்தாக்குதலில் ஒரு உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்ட வெற்றிச் சம்பவத்திலும் பரஞ்சோதிக்கு முக்கிய பங்குண்டு.

அவனது அதீத திறமையினாலும், ஆற்றலினாலும் மிகவும் குறுகிய காலத்திலேயே அவனுக்கு 50 கலிபர் விமான எதிர்ப்பு ஆயுதமும், அதனுடனான குழுவின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது தனக்கு வழங்கப்பட்ட அந்த ஆயுதத்தினை ஒழுங்காக பாதுகாக்கவும், தனக்கு வழங்கப்பட்ட அந்த பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றவும் அவன் என்றும் தவறியதில்லை. பரஞ்சோதி பங்குபற்றிய ஒவ்வொரு தாக்குதலிலும் தனது உன்னத திறமையை வெளிக்காட்டிய வண்ணமே இருந்தான். அதிலொன்று நமது நெஞ்சங்களை விட்டு அகல முடியாத ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல். அத்தாக்குதலில் தனது ஆயுதக் குழுவுடன் பங்குபற்றிய பரஞ்சோதி, தனது பொறுப்பில் இருந்த இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்த வேளையிலும் சற்றும் மனந்தளராது தீரத்துடன் போராடி தனது 50 கலிபர் ஆயுதத்தினையும், போராளிகளையும் பாதுகாத்தான்,



கப்டன்
பரஞ்சோதி

இயக்கத்தின் மீதும் போராட்டத்தின் மீதும் பரஞ்சோதி கொண்டிருந்த விசுவாசத்தின் தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு அவனது வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களில் ஒன்றை உதாரணமாகக் கூறலாம். ஆனையிறவு தாக்குதலின் பின்னர் பரஞ்சோதி விடுமுறையில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவிற்கு சென்றிருந்தான் அவனுக்கு வழங்கப்பட்ட ஒரு வார விடுமுறையில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைதீவிற்கு சென்றிருந்தான் அவனுக்கு வழங்கப்பட்ட ஒரு வார விடுமுறை முடிந்த பின்னரும் கூட அவன் முகாம் திரும்பவில்லை. நாட்கள் நகர்ந்த வண்ணம் இருந்தன. பரஞ்சோதி அவ்வாறு நடந்து கொள்பவன் அல்ல அதனால் அவனது பொறுப்பாளர்களுக்கு தர்மசங்கட நிலைமையாகி விட்டது. விடுமுறையில் சென்றவனைக் காணவில்லை. என்ன நடந்தது தெரியவில்லை என்று அவர்கள் கவலையடையத் தொடங்கிவிட்டனர். அந் நாட்களில் மணலாற்றுப்பகுதியில் பாரிய இராணுவத் தாக்குதல்களுக்கு போராளிகள் முகம் கொடுத்துக் கொண்டிருந்த நேரம். அத்தாக்குதல்களில் காயமடைந்த போராளிகள் யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட வண்ணம் இருந்தனர் இந்நேரத்தில் அங்கு காயமடைந்துவந்திருந்த தமது பிரிவுப் போராளிகளைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்த சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்கள் சிலர் அங்கு பரஞ்சோதி காயமடைந்து வந்திருப்பதனைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். விடுமுறையில் சென்றவன் எவ்வாறு காயமடைந்தான் என்பது பரஞ்சோதியோடு கதைத்த பின்னரே அவர்களுக்கு விளங்கியது.

''அண்ண! நான் லீவில போய் ரெண்டு மூண்டு நாளிலேயே அந்த சண்டை தொடங்கிற்று. அங்க சண்டை நடக்கேக்குள்ள லீவில நிக்க எனக்கு பிடிக்கேல்ல அது தான். உடனேயே அந்த போயிற்றன் அதி தான் இந்தக் காயம்'' என்று தனது காயத்தின் வேதனையிலும் புன்சிரிப்போடு கூறி முடித்தான் பரஞ்சோதி. மணலாற்றுச் சமரின் பின்னர் பரஞ்சோதி ஆசிரியனாக மாறினான். ஆமாம் 50 கலிபர் துப்பாக்கி பற்றி ஏனைய போராளிகளுக்கு கற்பிக்கும் பொறுப்பு பரஞ்சோதிக்கு வழங்கப்பட்டது. முதலில் கடற்புலியைச் சேர்ந்த போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வந்த அவன் பின்னர் தனது சகபிரிவு போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வந்தான் அவனது பழகும் தன்மையினாலும் ஒழுக்கத்தினாலும் திறமையினாலும் ஒவ்வொரு போராளிகளும் அவன் மேல் நல்ல அன்பும் மரியாதையும் செலுத்தினர் அவர்கள் ஒவ்வொருவரும் அவனை பரஞ்சோதி மாஸ்ரர் என அன்பாக அழைத்தனர் இவ்வளவிற்கும் அவன் பாடசாலை நாட்களில் பெரிய கெட்டிக்காரனும் அல்ல அவன் படித்தது 8 ஆம் தரம் மாத்திரமே.

இவ்வாறு அவன் பயிற்சி ஆசிரியனாக இருந்து வந்த காலப்பகுதியில் தான் மணலாற்றில் மற்றுமோர் பாரிய இராணுவத் தாக்குதல் ஆரம்பமாகியது. எமது தாக்குதல் வரலாறுகளில் இந்த மணலாற்றுச் சமர் தனக்கென ஓர் சிறப்பு முத்திரை பதித்த ஒன்று. அன்றில் இருந்து இன்றுவரை எமது எந்த ஒரு தாக்குதலை எடுத்துக்கொண்டாலும் அது எமது போராளிகளின் உறுதியான மனோபயத்தை எதிரிக்கு வெளிக்காட்டுபவையாகவே அமைந்து வருகின்றன. அந்த வகையில் எமது போராளிகளின் மனோபயத்தை தெளிவாக வலியுறுத்திய தாக்குதல்களில் ஒன்று இந்த மணலாற்றுச் சமர் ஆகும் இராணுவத்தினர் புதிதாகக் கொண்டுவந்த டாங்கிகளையும், பீரங்கிகளையும் கொண்டு முன்னேறத் தொடங்கினர். இவற்றையெல்லாம் கண்டு நாம் பயப்படுபவர்களா என்ன: எமது போராளிகள் தமது மனோபலத்தையே கவசமாகக் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். இறுதியில் இராணுவத்தினர் தமது டாங்கிகளை இழந்த நிலையில், பீரங்கிகளை எம்மிடம் பறிகொடுத்த நிலையில் பின்வாங்கினர்.

இந்தத் தாக்குதல் வெற்றியில் பரஞ்சோதியின் பங்கு அளப்பெரியது எனலாம் இத்தாக்குதலில் முன் அணியில் நின்ற அவன் தனது முழுத்திறமைகளையும் காட்டிப் போராடினான். தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில் இராணுவத்தினால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த 50 கலிபர் துப்பாக்கியைக் கழற்ற வேண்டியிருந்தது. அப்பகுதியில் நின்ற போராளிகளில் அதனைக் கழற்றத் தெரிந்தவன் பரஞ்சோதி ஒருவனே. அவன் கணநேரமேனும் தாமதிக்காது விரைவாகச் செயற்பட்டான் வாகனத்தில் பாய்ந்தேறி மிக விரைவாக அதனைக் கழற்றி சக போராளிகளிடம் ஒப்படைத்தான். இவ்வாறு மிகத் திறமையுடன் போராடிய பரஞ்சோதி இறுதியில் தலையில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவ்வளவு நாட்களும் தனது மண்ணில விடுதலைக்காகப்போராடிய அவன் கடைசி இரண்டு நாட்களும் தனது உயிருக்காகப் போராடி வீரமரணம் அடைந்தான். ஆம் அவன் இறுதி வரை போராடிக் கொண்டேயிருந்தான்.

பரஞ்சோதியின் மறைவு அவனையறிந்த ஒவ்வொரு போராளிக்கும் மிகத்துயரைக் கொடுத்திருக்கும். ஒவ்வொரு போராளியுடனும் அவன் பழகும் விதம்; கடமை நேரங்களில் அவனது கண்டிப்பு, அவனது திறமை; விசுவாசம்; பொறுப்புணர்ச்சி - ஆமாம் அந்த நினைவுகள்தான் எமக்கு மீதி.

நீ மீண்டும் திரும்பி வருவாய் - என்ற
நம்பிக்கை எமக்கு இல்லை - ஆனாலும்
நீ நடந்து சென்ற பாதச் சுவடுகளை - நாம்
உறுதியுடன் பற்றித் தொடர்கின்றோம்.

கே. கபில்

# சரித்திரமாய் நிற்கும் ஆனி ஐந்து

ஆனி ஐந்தேவா! சோதனைகளையும் வேதனைகளையும் தந்த ஆனிஐந்தேவா! இலங்கைத்தீவில தமிழரின் அரசியல் வரலாற்றின் முக்கிய சம்பவத்துடனு தொடர்பு கொண்ட ஆனி ஐந்தே, உன்னை நினைவு கூர்வது. தொடரும் விடுதலைப் போராட்டத்திற்கு உரமாக அமையலாம். ஆண்டு தோறும் நினைவு கூரப்படும் ஒரு நளுக்கு ஏதோ ஒரு முக்கியத்துவம் தான் இருக்கக் கூடும். ஆனால் உனக்கோ எந்த ஆண்டின் நிகழ்ச்சிக்கு முன்னிடம் தந்து முக்கியப்படுத்துவது எனப் புரியாமல் திகைக்க வேண்டிய நிலை. எனவே தான் காலவோட்டத்தைப்பின் நோக்கிப் பார்த்து நினைவில் நிறைந்த நாட்களை சுட்டிக்காட்டும் ஆவல் மேலெழுகிறது.

## 1947 ஆனி 5

அந்நிய ஆதிக்கம் இலங்கைத்தீவில் அந்திம காலத்தில் இருந்த 1947 ஆம் ஆண்டின் ஆனி ஐந்து- அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வேலை நிறுத்தம் ஆரவாரமாக இடம் பெற்ற வேளை அதனை முறியடிக்க வென்றே பொலிசார் நடத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் இரத்தம் சிந்தினர் உழைக்கும் மக்கள் உழைக்கும் மக்களின் சார்பாக இரத்தம் சிந்தப்பட்ட போதிலும் அதிலும் தமிழன் ஒருவன் தன்னுயிர் தர நேர்ந்தது ஆம் கந்தசாமி என்ற பெயருடைத் தமிழன் தியாகி என்ற பட்டத்தை தனதாக்கிக் கொண்டான்.

அந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட கொலன்னாவைச் சந்தியில் கந்தசாமி சிலை எழுப்பி அவனைக் கௌரவிக்க உழைக்கும் மக்கள் எடுத்த முயற்சி கனியாகுவதற்கு ஓராண்டு காலம் சென்றது ஒரு ஆண்டிற்கு பின்னராயினும் தமிழரின் தியாகத்தை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள முற்பட்டார்களே எனத் தமிழர் அடைந்த புளகாங்கிதம் வெறும் நீர்க்குமிழியானது. எட்டு ஆண்டுகளில அந்தச் சிலையையும் நொருக்கி இன வெறியை வெளிச்சம் போட்டுக்காட்டியது சிங்களக்காடையர் கூட்டம்.

## 1956 ஆனி 5

இருமொழி ஒரு நாடு என்று இருவரை இருந்த நீதி, கருவினில் சிதைந்து போக இனவாதத் தேசியம் என்பது பௌத்த சிங்களப் பேரினவாதப் பூதமாக உருவெடுத்தது என்பதை அடையாளப் படுத்தும் நாளாக 1956 ஆம் ஆண்டின் ஆனி ஐந்து அமைந்தது சிங்களம் மட்டும்தான் இந்தத் தீவின் ஆட்சிமொழியாக அங்கீகாரம் பெறும் என்று சட்டம் நிறைவேற்ற ஆட்சியாளர் பாராளுமன்றத்தில கால்கோள் இட்ட நாள் இது. இதனை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் காலிமுகத் திடலில் நடந்த அறப்போராட்டம் சிங்களக்காடையரால் தாக்குதலுக்கு உள்ளாக தமிழரின இரத்தத்தால் கொழும்பின் அரசியல் நனைந்தது. தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரம் எங்கும் பரவ வித்துக்கள் விதைக்கப்பட்டன தமிழர்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது.

தலைக்கு நல்லெண்ணை பூசுவதையும், தமிழ்ப் பெண்கள் தம் மங்கலப் பொட்டுகளையும் தவிர்த்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அவல நிலைக்கு ஆளாகித் தவித்தனர். அதாவது ஒவ்வொரு தமிழனும் தான் கடைப்பிடிக்கும் நாளாந்த வழக்கத்தைக் கைவிடும் தமிழன் என்னும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

- இனியவன்

# வரலாறு பொய்ப்பித்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

ஜே. ஆர். தனது ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மானசீகமான முயற்சிகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. இனப்பிரச்சினையைத் தனது ஆட்சியதிகாரத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திய ஜே. ஆர். அமிர்தலிங்கம் தலைமையை ஏமாற்றி அதனையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஒன்றாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்ற ஓர் அரசியல் நாடகத்தை 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கலானார். இத்தகைய மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1980 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி ஓர் ஆய்வரங்கு இடம் பெற்றது. இவ்வாய்வரங்கத்தினை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் "உணர்வுப்" பத்திரிகைக் குழு ஒழுங்கு செய்திருந்தது. இவ்வாய்வரங்கில் பேராசிரியர் கா. இந்திரபாலா. பொருளியல் உதவி விரிவுரையாளர் மு. நித்தியானந்தன், எம். அந்தோனிமுத்து, வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளர் மு. திருநாவுக்கரசு ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர். அந்த ஆய்வின் மூலம் மாவட்ட அபிவிருத்திச் சபை ஓர் ஏமாற்று வித்தை என்ற கருத்திற்கே ஏறக்குறைய அனேக ஆய்வாளர்களும் வந்திருந்தனர். அவ்வாய்வுக் கட்டுரைகள் நூல் வடிவில் வெளியாகியும் இருந்தது. 1981 ஆம் ஆண்டு யூன் 4 ஆம் திகதி மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் இடம் பெற்றது. மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிய தோல்வியையும், அதனை ஒட்டி அன்று முன்கூட்டியே வெளியாகியிருந்த மேற்படி ஆய்வாளர்களின் கருத்துக்களையும் நினைவு கூர்வது பொருத்தமானது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும் என்ற நூலிலிருந்துதொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

மாவட்ட அபிவிருத்திச்சபைகள் பற்றிய அரசியற் பின்னணியை பேராசிரியர் கா. இந்திரபாலா எடுத்து விளக்குகையில்:-

"முன்னொரு போதும் இல்லாதவாறு தமிழர் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைந்துள்ள இக்கட்டத்தில் மீண்டும் அரசாங்கக்கட்சி ஒரு பிரதேச நிர்வாக சபையை - இம்முறை மாவட்ட அபிவிருத்திச் சபையை முன்வைக்கின்றது. தமிழர் பக்கத்தில் கோரிக்கை மேலும் மேலும் கூடிச்செல்ல அதற்குப் பரிகாரமாக மறுபக்கத்திலிருந்து மேலும் மேலும் குறைவான ஒன்று முன்வைக்கப்படுவதனை கடந்த 50ஆண்டுக்கால வரலாறு காட்டுகின்றது. 1920 களில் தமிழர் கூடுதலான பிரதிநிதித்துவம் கோரி, 1940களில் சமமான பிரதிநிதித்துவம் கோரி, 1949 இன் பின் பாகச் சமஷ்டி கோரி. இறுதியில் தனிநாடு கோரி நிற்கின்றனர். மறுபக்கத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வாக, 1920 களில் சிங்களத் தலைவர்கள் சிலர் சமஷ்டிமுறையை முன்வைத்து 1950களில் பிராந்திய சபைகளை முன்வைத்து, 1960களில் மாவட்ட சபைகளை முன்வைத்து இப்பொழுது 1980 களில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை முன்வைக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.- ப15-16.

திரு. மு. நித்தியானந்தன் தனது கருத்தை பின்வருமாறு கூறுகிறார்.

"இந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்தினால் மேலிருந்து கீழ் நோக்கிக் கையளிக்கப்படுகின்றதுஎன்னும்போதே மத்திய அரசாங்கம் தனது இருப்பினை, ஆளுமையினை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும் செய்கின்றது, அதிகாரம் கையளிக்கப்பட்டபிரதேசம் சுயாதிபத்தியத்தோடு கூடிய சமஷ்டி அந்தஸ்தினை தொடுவதுகூட இங்கு சாத்தியமற்றதாகும்.

"அதிகாரம் கைமாற்றிக் கொடுக்கப்பட்ட உள்ளூர் அமைப்புக்கள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்துவத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் அலுவல் நிலையங்களாக மாற்றியமைக்கப்படுவதனை நாம் அதிகாரக் கைமாற்றம் என்று கூறமுடியாது. நிர்வாகப் பரவலாக்கம் என்று கூறிக்கொள்ளலாம். ஆயினும் இதுவே பல சந்தர்ப்பங்களில் அதிகாரக் கைமாற்றம் என்றும் பிழையாகக் கருதப்பட்டு வருகின்றது.

"உண்மையில் அதிகாரக் கைமாற்றம் என்பது அதன் சரியான அர்த்தத்தில் விளக்கப்படவேண்டுமானால் மேல் மட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் கீழ் மட்டத்துக்கு செங்குத்தாக அவை பரிமாற்றப்படுவதனை விடுத்து - இடை மட்ட நிலையில் தீர்மானங்களை மேற்கொள்கின்ற உரிமையினை உள்ளூர் அமைப்புக்களுக்கு வழங்குவதாகும். தம் பிரதேசம் சம்பந்தமாக அப்பிரதேச அமைப்புக்கள் சட்டவாக்கத்தினை மேற்கொள்கின்ற உரிமையையும் இது குறித்து நிற்கின்றது." பப 22-23

"தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தமிழர் தம் வரலாறு. மொழி, பாரம்பரியம், பொருளாதாரத் தடைகள் இனத்தின் தனித்துவம் கல்வியிற் பாரபட்சம், வேலை வாய்ப்பு புறக்கணிப்பு தமிழர்களின் பாரம்பரியப்பிரதேசங்களில் பெரும்பான்மை இனக் குடியேற்றங்கள்என்பனஇன்று பிரதேச மட்டத்திலல்லதேசிய மட்டத்தையும் தாண்டிச்சர்வதேச மட்டம் வரை சென்றுவிட்டது. தமிழ் இனம் பற்றிய கொள்கை இன்றைய அரசாங்கங்களின் முக்கிய கொள்கையாக ஒரு தேசிய அரசியற் பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது இலங்கையில் தமிழர் பிரச்சினைகளை மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மூலமாகத் தாம் தீர்த்துவிட்டதாக அரசாங்கம் பிரசாரம் மேற்கொள்ளும் போக்கிற்கான அறிகுறிகள் இப்போதே தென்பட ஆரம்பித்துள்ளன இந்நிலையில் வெறும் உள்ளூராட்சி நிர்வாக சீர்திருத்தங்களினால் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்என்பது அபத்தமானது" ப.52

திரு. எம். அந்தோனிமுத்து தனது கருத்தைக் கூறுகையில் "தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்ற அரசியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கோ "அல்லது நிருவாகத்தைப் பரவலாக்கித் தமிழ் மக்களிடம் தமிழ்ப்பிரதேச நிருவாகத்தை ஒப்படைப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலைகளை உயர்வடையச் செய்வதற்கோ இச்சபை விசேடமாக முனையவில்லை இச்சபைகள் பொதுவாக பொருளாதார அபிவிருத்தியைமாவட்ட மட்டத்தில் மேற்கொள்வதற்கு உதவும் ஆலோசனைச் சபைகளே எனலாம். எனவே தமிழ் பேசும் மக்களின் விசேட பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் அதிகாரமும் பலமுமற்ற ஒரு "மண் குதிரையே" இம்மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என வர்ணிப்பது தவறானதல்ல." பப. 73-74

திரு மு. திருநாவுக்கரசு தனது கருத்தைக் கூறுகையில்:-

"தமிழ் மக்களின் தேசியத்தன்மையை ஊடறுக்கும் முக்கியமான பிரச்சினை குடியேற்றத் திட்டமாகும். யூ.என் பி 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் குடியேற்றத் திட்டப் பிரச்சினையைத் தீர்ப்பதாக உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால் இன்று அது தீர்க்கப்படவில்லை.

"குடியேற்றம் செய்யப்படுவது சம்பந்தமாக எந்தவிதமான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரமும் இச்சபைக்கில்லை" பா.79-80.

"மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு கொள்கைகளை வகுப்பதற்கான எந்தவிதமான அதிகாரமும் இல்லை. ஆனால் துணைநிலைச் சட்டங்களை வகுப்பதற்கான அதிகாரம் உண்டு. வகுக்கப்படும் துணைநிலைச் சட்டங்களை மாவட்ட அமைச்சர் அதற்குரிய அமைச்சரிடம் சமர்ப்பித்து அவரது சம்மதத்தின் பேரிலும், அவரது திருத்தத்தின் பேரிலும் தான் நிறைவேற்ற முடியும்" ப.81

"தமிழ்த் தேசிய இனத்தின் முக்கியமான பிரச்சினைகளுள் கல்வி, உயர்கல்விப் பிரச்சினையும் ஒன்றாகும். உயர்கல்வி பொறுத்தோ, கல்விக் கொள்கை பொறுத்தோ அபிவிருத்திச்சபைக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. கல்வியில் இச்சபைக்குரிய பொறுப்பு கட்டிடம் கட்டுதல் கட்டிடங்களை பழுதுபார்த்தல் என்பனதான்" ப 85.

"அபிவிருத்திச் சபையானது சுயாதீனமற்றதொன்றுஎன்பது புலனாகின்றது. சுயாதீனத்தை வேண்டி நிற்கும் தமிழ்த் தேசிய இனத்திற்குச் சுயாதீனமற்ற அபிவிருத்திச் சபையால் பயன்பாடு உண்டு என்று கூறுவதாயின் அக்கூற்று வெறும் அபத்தமான ஒன்றாகும். ப. 84

"இறுதியிலும் இறுதியாக நோக்கும் போது தமிழ்த் தேசியஇனம் இவ்வபிவிருத்திச் சபை அமைப்புக்குள் தனது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு உண்டென்று எண்ணாது சரியான விளக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கு அபிவிருத்திச்சபை அமைப்புக்குள் தீர்வு உண்டென்று யாரும் கூறுவர்களாய் இருந்தால் அது குண்டானுக்குள் குதிரைச் சவாரி நிகழ்கின்றது என்று சொல்வதற்குச் சமனாகும்." ப.89.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இம்மாவட்ட அபிவிருத்திச்சபைகள் தீர்வாகாது என்றும் அதன் பலவீனங்களைப் பற்றியும் மேற்படி ஆய்வாளர்கள் தமது கருத்துக்களை இம் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் நடைமுறைக்கு வர முன்பே தெளிவாக வரையறுத்துக் கூறியிருந்தார்கள். ஆனால் இக்கருத்துக்களை அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணியினர் கோபாவேசத்துடன் எதிர்த்தனர். பல்கலைக்கழகத்திற்கு முன்னால் கூட்டணியினர் நடாத்திய ஒரு பொதுக்கூட்டத்தில் மேற்படி பல்கலைக்கழகத்தினரை ஆலாலசுந்தரம் உள்ளிட்ட பலர் அநாகரிகமான வார்த்தைகளால் கண்டித்தனர். ஆனால் இறுதியில் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் எவ்வளவு பொய்யானது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தேர்தல் நிகழ்ந்த 1981 யூன் 4 ஆம் திகதியை ஒட்டி, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றி 1980 யூலை 10 ஆம் திகதி பேராசிரியர் கா. இந்திரபலா, பொருளியல் உதவி விரிவுரையாளர்கள் மு.நித்தியானந்தன், எம்.அந்தோனிமுத்து, வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளர் மு. திருநாவுக்கரசு ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

தொகுப்பு - மு. தி.

## விசாரணை

கொலைகள் குறித்து விசாரணை நடத்த ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. காலம் தாழ்த்தியே இக்குழு நியமிக்கப்பட்டது.

"பாதுகாப்புக் காரணங்களுக்காக வாகனமொன்றில் விசாரணைக் குழு சம்பவம் நடந்த இடத்தைச் சென்றடைந்தது.

"உடம்பின் இந்தப் பகுதி யாருடையது? விசாரணைக் குழுவில் ஒருவர் கேட்டார். பகுப்பாய்வாளர் அங்கில்லை.

பல்லொன்றைக் காட்டி, "இந்தப் பல் யாருடையது?" விசாரணைக் குழுவில் இன்னொருவர் கேட்டார். பல்பற்றிய ஆய்வாளரும் சுற்று வட்டாரத்தில் இல்லை.

"உடலின் சில பாகங்கள் ஏற்கனவே புதைக்கப்பட்டு விட்டன" என்றார் சமீபத்தில் நின்றவர்ஒருவர் "பிரேதக் குழி தோண்டுபவர் எங்கே?" அவரும் இல்லை. "உடலின் சில பாகங்களை நாய்கள் பசியாறிவிட்டன" "என்றார் ஒருவர் பக்கத்தில் மிருகவைத்தியரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"மரணத்துக்கான காரணத்தை உண்மை என்று நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் எதுவும் இல்லாததால் விசாரணையை மேற்கொண்டு நடத்த வேண்டிய தேவையில்லை என்ற முடிவைக் குழு எடுத்தது.

நீதி விசாரணையில் நம்பிக்கையிழந்த மக்கள் மரணங்கள் தொடர்பான மர்மத்தை அறிய பகவதியை நாடினார்கள். அவர் சம்பவம் நடந்த இடத்தை எட்டியும் பார்க்கவில்லை.

திறமைவாய்ந்த புலனாய்வுப் பத்திரிகையாளர் குழு ஒன்று பகவதியின் உதவியுடன் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு பூர்வாங்க அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பித்தது இந்த அறிக்கையில் கொலைச் சம்பவங்களைக் கண்ணால் கண்டவர்களின் சாட்சியங்கள், கொலையுண்டவர்களின் விபரங்கள், கொலைகள் செய்யப்பட்டமுறை, பாவிக்கப்பட்ட ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் அடங்கியிருந்தன. கொலைகள் நிகழ்த்தப்பட்ட போது பேசப்பட்ட வார்த்தைகளையும் அந்த அறிக்கை உள்ளடக்கியிருந்தது.

அரசு தலையிட்டு பகவதி மேலும் விசாரணைக்கு உதவாமல் தடுத்து நிறுத்தியது. விசாரணையை நடத்துவதற்கு கையாண்ட வழி முறைகள் சாட்சி பற்றிய ஒழுகுகளுக்கு மாறானது என்றும் வழக்கமான முறைகளுக்கு அப்பாற்பட்டது என்றும், ஒரு பத்திரிகைச் செய்திக்குறிப்பை அரசு வெளியிட்டது.

நன்றி: பஸில் பெர்னாண்டோ
Christan Worker

சுதந்திரம் நிலைப்பதையும், வெற்றி பெறுவதையும் உறுதிப்படுத்த நாங்கள் எந்தவிலையும் கொடுப்போம். எந்த சுமையையும் தாங்குவோம். எந்த இன்னலையும் எதிர் கொள்வோம். எந்த நண்பரையும் ஆதரிப்போம். எந்தப் பகைவனையும் எதிர்ப்போம் என்பதை நம் நலனை நாடும் நாடுகளும் சரி, நமக்குத் தீங்கு நினைக்கும் நாடுகளும் சரி, அறிந்து கொள்ளட்டும்.

— ஜான் எஃப் கென்னடி.

வாழ்வு நடத்த வாய்ப்புத் தருவதே சுதந்திரம்; வாழ்வு நடத்த வாய்ப்பு என்பது, பிழைப்பு நடத்துவதற்கு மட்டுமல்ல, வாழ்வில் போற்றக் கூடிய ஒரு குறிக்கோளை ஏற்பதற்குமாகும். நாம் சுதந்திரத்தை அடையலாம். ஆனால் ஒருமுறை இழந்து விட்டால் அதை மீண்டும் பெறவே முடியாது.

ருஸ்ஸோ.

# "அலுவலக வேலையை விட உடலுழைப்பு பெரிது" - மாயவன்

யாழ்ப்பாணத்தில் முன்னணிக் கடைச்சல் வல்லுனர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் மாயவன் என்ற அழைக்கப்படும் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணன் (வயது 67) இயந்திர சாதனங்களைத் திருத்துதல், கடைசல், பட்டடையில் உதிரிப்பாகங்கள் செய்வதன்மூலம் யாழ். குடாநாட்டில் நன்கு அறிமுகமாயிருக்கிறார். மாயவன் என்ற பெயர் முற்றுப்பெற்று விடாமல், முத்துக்கிருஷ்ணனின் மூத்தமகன் அற்புததேவன் தன்னை மாயவன் என்ற 'ஞானவிநாயகம்' எடுத்துக் கொண்டு ஆரோக்கியமான தொழில் வாய்ப்பு மற்றும் வெளியுலகில் நன்மதிப்புடன் இயந்திரசாதனங்கள் பழுது பார்க்கும் தொழில் பார்த்து வருகிறார்.

முத்துக்கிருஷ்ணனுக்கு எல்லாமாக ஏழு பிள்ளைகள். அற்புததேவன் (மாயவன் ஜூனியர்) சிவகுமாரன், பரமானந்தன் என்று மூன்று ஆண்கள். குழந்தைப் பருவத்துச் சூழ்நிலைதான் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது என்று கூறுகிறார்கள். இதற்கு உதாரணமாக இருக்கிறார்கள் இவர்கள். எப்பொழுதும் இயந்திர சாதனங்கள் நிறைந்த சூழலிலேயே வாழும் அதிர்ஷ்டம் மூன்று சகோதரர்களுக்கும் கிடைத்தது இந்த பின்னணியில் இந்தத் தொழிலில் இவர்களுக்கு இருந்த ஆர்வம் காரணமாக முறை சாரா வழியில் தொழிலைத் தந்தையாரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்.

"எங்கள் குடும்பத்தில் எல்லோரும் உழைப்பாளிகள். எனது தந்தையின் தொழில் தச்சுவேலை. மாட்டு வண்டி செய்வார். எனது மாமனார் கணபதிப்பிள்ளையும் இயந்திர சாதனங்கள் செய்வதில் கைரா கண்டவர் என்று அசைபோடுகிறார் முத்துக்கிருஷ்ணன்.

யாழ்ப்பாணத்தில் கல்லூரிப் படிப்பை எட்டிப் பார்க்கக் கூட முடியாத சாதாரண தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன், உள்ளூரில் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன்பாடசாலையில் ஆறாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். தனது 15— வது வயதில் தந்தையார் வேலுப்பிள்ளையின் தச்சசாலையில் சேர்ந்து முழுநேரமும் தொழில் பழகுவதில் ஈடுபட்டார்.

மாமனாரின் தொடர்பால் சிறு வயதிலேயே முத்துக்கிருஷ்ணனுக்கு சுவாரசியமான அனுபவம் கிடைத்தது. அப்போது அவருக்குப் பத்துப் பன்னிரெண்டு வயதிருக்கும் அவரது மாமனார் கணபதிப்பிள்ளை நீர் இறைக்கும் இயந்திரத்தை உலோகத்தில் ஒரே வார்ப்பில் செய்யாமல், மரத்தில் பல பகுதிகளாகச் செய்து இணைத்து அளவெட்டியில் ஒரு அப்புக்காத்து வீட்டில் பூட்டியிருக்கிறார். நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பரிசோதித்து இணைக்க மாமனருடன் கையுதவிக்குச் சென்ற அவருக்கு, அவரின் சுட்டித்தனத்தைக் கண்டு அப்புக்காத்தின் மனைவி மாயவன் என்று அழைத்தார். அன்று முதல் இதுநாள் வரை முத்துக்கிருஷ்ணன் மாயவன் என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறார்.

> முத்துக்கிருஷ்ணன் (மாயவன்) பெற்ற தொழிற் பயிற்சி நம்பிக்கை நிறைந்ததாகவும், காலத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் குணத்ததாகவும் இருந்தது.
>
> உரையாடல் தொகுப்பு : மதன்

இருபது வயதில் ஈழகேசரிப் பொன்னையாவின் அறிமுகத்தோடு அவர் கனரக அச்சு இயந்திரம் திருத்துனர் வேலை பழக கொழும்பில் சாமுவேல் அன்ட் சன்ஸ் நிறுவனத்தில் சேர்ந்துள்ளார். முத்துக்கிருஷ்ணனின் காலில் சக்கரம் போலும் இரண்டு மாதங்களுக்கு மேல் இங்கு வேலை பழக அவருக்குப் பொறுமையில்லை. ஊருக்குத் திரும்பி விட்டார். அபசகுனம் என்பார்களே, அப்படி இருக்குமோ? ஏன் இது நல்ல சகுனமாகவே அமையக் கூடாது என்று மாமனார் கணபதிப்பிள்ளையின் நிழலில் ஒதுங்கிக் கொண்டார். மாமனாரின் பட்டடையில் கால் அடி எடுத்து வைத்த பிறகுதான் பல்வேறு இயந்திர சாதனங்களுடன் ஊடாடும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் தொடர்பு பிற்பாடு விதியாக மாறப்போகுது என்று அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

பாக்குச்சீவும் இயந்திரத்தை முதன் முதலில் கண்டுபிடித்தது எனது மாமனார் கணபதிப்பிள்ளை தான் என்கின்றார் முத்துக்கிருஷ்ணன். மின்சாரம் இல்லாத காலம். தேயிலைத் தோட்டத்திலிருந்து கொண்டு வந்த பாரிய மோட்டர் ஒன்றின் உதவியுடன் மரமரிதல், அரிசி,மாகுத்துதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. காலத்துக்குரிய சுயதன்மையைக் கொண்டதாக மாமனாரின் தொழிற்சாலை அமைந்திருந்தது இந்த முத்துக்கிருஷ்ணன் பெற்ற தொழிற்பயிற்சி நம்பிக்கை நிறைந்ததாகவும் காலத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் குணத்ததாகவும் இருந்தது. தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டது.

ஆனால் ஆச்சரியங்கள் எங்குதான் இல்லை? முத்துக்கிருஷ்ணன் திரும்பவும் ஓர் முறை ஈழகேசரிப் பொன்னையாவை நாடினார். பொன்னையா வசாவிளானில் மில்லொன்று போட்டார். அரிசி, கோதுமை அரைக்கும் காலமது. ஆரம்பத்தில் முத்துக்கிருஷ்ணனின் வாழ்க்கை கஷ்டமாகத்தான் இருந்தது. எதுக்கும் எல்லைகள் என்று எதுவும் கிடையாது. முத்துக்கிருஷ்ணனின் கண்ணியமும், இருதயபூர்வமாகத் தொழில் செய்வதும் ஈழகேசரிப் பொன்னையாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஈழகேசரிப்பொன்னையா பிள்ளையார் சுழி போட்டது போல் மில்லின் திறப்பை முத்துக்கிருஷ்ணனிடம் கையளித்தார். பொன்னையாவின் நேரிய ஆளுமை முத்துக்கிருஷ்ணனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

'எனது முன்னேற்றத்துக்கெல்லாம் பெரியவர்தான் காரணம்என்றே சொல்வேன்என்று நன்றியறிதலுடன் காலஞ்சென்றஈழகேசரிப் பொன்னையாவை ஞாபகப் படுத்துகிறார் முத்துக்கிருஷ்ணன்

மில்லில் வேலை செய்தகாலத்தில் மீதமிருக்கிற பொழுதுகளில் ஏதாவது வருமானம் பெறலாம் என்ற நோக்கத்தில் முத்துக்கிருஷ்ணன் சிறுரக மர அரிவு ஆலை ஒன்றை நிறுவினார். இது தனக்குக் கைகொடுத்து உதவியதாககூறுகிறார்முத்துக்கிருஷ்ணன். இப்படிஒரு தொழிலை நம்பி, அதுவே கதி என்று முத்துக்கிருஷ்ணன் இருக்கவில்லை சும்மாவே உட்கார்ந்து ஒரு தொழிலைப் பார்த்துக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்;

முத்துக்கிருஷ்ணன் தனது தந்தை மற்றும் மாமனாரிடமிருந்து பெற்ற தொழில் நுட்ப அனுபவம் நம்பிக்கையை ஏற்படுத்தியதோடல்லாது அந்த நம்பிக்கையை நிறைவேற்றவும் செய்தது அப்போது பாவனையிலிருந்த எல்லாவிதஇயந்திரசாதனங்களின் அடிப்படைத்தொழில் நுட்பத்தை தெரிந்திருந்த இவருக்கு வேலை வாய்ப்புக்கள் நிறையக் கிடைத்தன. அச்சு இயந்திரம் திருத்துதல், வெல்டிங் செய்தல் தானியங்கி சிலின்டர் திருத்துதல் உதிரிப்பாகங்கள் வார்த்தல், கடைச்சல் — இவ்விதம் எல்லாத் தொழில்களும் இவரை நாடி வந்தன. யாழ்ப்பாணத்தின் எந்த வித தொழில் நுட்ப வகையை எடுத்துக்கொண்டாலும், அப்போது யாழ்ப்பாணம் பறங்கித்தெருவில் (பிரதான வீதி) இருந்த மச் சோடா குளிர்பானயந்திரம்



முதல் அச்சு இயந்திரம் வரை முத்துக்கிருஷ்ணனின் கைபடாத இடம் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகஇயந்திர சாதனங்களுடன் உறவாடிய முத்துக்கிருஷ்ணன் இன்று ஓர் ஆடி ஓய்ந்த பம்பரம். உடல் நலக் குறைவால் வீட்டில் முடங்கிப் போய்க்கிடக்கிறார்.

எந்த இயந்திரங்களும் செயலாம் மூலப்பொருள்களுடன் முதலீடும் தேவை என்று அடித்துக் கூறுகிறார் முத்துக்கிருஷ்ணன். நடைமுறை அனுபவம் தரும் உறுதியான உண்மை இக் கூற்று.

இப்போது எதுவும் செழிப்பான நிலையில் இல்லை என்று கூறும் இவருக்கு தயாபரன் தயாரூபன் என்று இரண்டு பேரப் பிள்ளைகள். முறையே 7, 5,ஆம் ஆண்டுகளில் முத்துக்கிருஷ்ணன் படித்த அதே பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள். அலுவலக வேலையை விட உடலு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தொலைக் காட்சியில் புதியவகை —— விரைவில் சந்தைக்கு வருகிறது

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் துல்லியமாகப் பார்ப்பதற்குப் பல்வேறு முயற்சிகளைப் பாவனையாளர்கள் செய்துவரும் வேளையில் துல்லியமான காட்சிகளை தரக்கூடிய தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிப்பதில் நிபுணர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான ஆராய்ச்சியில் அமெரிக்கத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கும் நிறுவனமொன்று ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் ஒலி, ஒளி அலைகளை மின்காந்த அலைகளாக மாற்றி காற்றிலே அனுப்பி வைக்கின்றன. இவ் அலைகள் தொடர்ச்சியான பல்வேறு சக்தி கொண்ட அலைகளாக உணர்கருவி [அன்ரனா] மூலம் தொலைக்காட்சிப் பெட்டியை வந்தடைகிறது இம்மின்காந்த அலைகள் வளிமண்டலத்திலுள்ள பல்வேறு மின்காந்த அலைகளினால் குழப்பமடைவதால் காட்சிகள் தெளிவற்றதாக இருப்பதை அவதானிக்கலாம்.

இதேவேளை தொலைக்காட்சிப் பெட்டித் திரைகளை நாம் உற்றுப் பார்த்தால் [இயங்கிக்கொண்டிருக்கும்போது] அதில் பல கிடைக் கோடுகள் இருப்பதைஅவதானிக்கலாம். இந்தக் கோடுகளில் மிகவேகமாக ஒளியின் துடிப்புகள் ஓடி மறைகின்றன. இந்தத் துடிப்புகளிலுள்ள மின்சக்திக்கு ஏற்ப நிறங்கள் தெரிகின்றன,

ஆரம்ப காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இந்தக் கோடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அப்போது அறுபது கோடுகள் மட்டுமே இருந்தன. பின்னர் தொழில் நுட்ப வளர்ச்சியால் ஐந்நூறுக்கு மேற்பட்ட கோடுகளைக் கொண்ட தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. தற்போது 625 கோடுகளைக் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் பெருமளவில் கிடைக்கின்றன.

இந்தக் கோடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது படங்களின் தெளிவு அதிகரிக்கும். எனவே தொலைக்காட்சிப் பெட்டி தயாரிப்போர் இந்தக் கோடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் ஜப்பானிய நிறுவனமொன்று 1,125 கோடுகளைக் கொண்ட தொலைக்காட்சியைத் தயாரிக்கத் தொடங்கியது. இதன் மூலம் பலமடங்கு துல்லியமான படங்களைப் பார்க்க முடிந்தது.

வேலவன்

ஆனால், அமெரிக்க நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்பு ஒளிபரப்புமுறை தொலைக்காட்சிப் பெட்டியின் தொழில் நுட்பம் என்பவற்றில் மிகப் பெரியமாற்றத்தைக் கொண்டு வருவதுடன் மிகத் தெளிவான படங்களைப் பார்க்கக் கூடிய வசதியை ஏற்படுத்துகிறது.

இந்த முறை மூலம் துடிப்பு அலைகளை [DIigital waves] தொலைக்காட்சிப் பெட்டிகள் பெற்று காட்சிகளைத் தரப்போகின்றன. இவை எண் தொலைக்காட்சிப் பெட்டிகள் (Digital television) என அழைக்கப்படலாம்.

இம்முறையே கணனிகளின் [Computers] செயற்பாட்டின் அடிப்படையாக இருக்கிறது. அதாவது இனிமேல் காட்சிகளைப் படம் பிடிக்கும் கமரா ஒலி, ஒளிக் கூறுகளை அதன் அடர்த்திக்கு ஏற்ப எண்களாக (அதாவது 0 அல்லது 1) மாற்றி ஒளிப்பதிவு நாடாவில் பதிவு செய்து கொள்ளும். இதன் மூலம் ஒரு படம் பல கோடி எண்களாகப் பிரிக்கப்படும். ஒரு படம் 100 கோடி எண்களைக் கொண்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இந்த எண்கள் முறைப்படுத்தப்பட்டு ஒளிபரப்புச்செய்யப்படும். தொலைக்காட்சிப் பெட்டிகள் இந்த எண்களை உள்வாங்கி ஒலி, ஒளியாக மாற்றித் தருகின்றன.

இந்த எண்முறை அலைவடிவங்களில் மாசுகள் [Noise] ஏற்பட வழியில்லை. அத்துடன் மிகத் தெளிவான படங்களையும் இதன் மூலம் பெற முடியும். தற்போது பரிசோதனை ஒளிபரப்பு வெற்றி பெற்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இவை சாதாரணமாகப் பாவனைக்கு வரச் சில காலங்கள் எடுக்கும். ஏனென்றால், ஒளிபரப்பு நிலையங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள், அஞ்சல் செய்யும் வலை வேலைப்பாடு [Net work] முழுவதிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். புதிய கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டி இருக்கும்.

இம்முறை ஒளிபரப்பின் முதல் தொகுதி 1994 க்குள் விற்பனைக்குத் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

# VIPER

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)



## 1-ST IN COM
## G. A. Q. '93

யாழ். பல்கலைக் கழகத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விரிவுரைகள்

**ஆரம்பம் 21-06-1992**

காலை 9.00 மணி
பேராதனை பல்கலைக் கழகத்திற்கான

## G. A. Q: B.A

விரிவுரைகள் நடைபெறுகின்றன


விபரங்களுக்கு:
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/4512)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 14 | 05 |
| 08 | 06 |
| 1967 | 1989 |

### வீர வேங்கை கப்டன் நேரு
### (இளையப்பா ஜீவகுமார்)

அமைதி காக்க வந்து - எம்
அமைதியை குலைத்திட்ட
இந்திய இராணுவத்திற்கு
இணையான மோதலில்
தன் தேசம் காக்க
தன்னுயிரை ஈந்து
வீரமரணம் அடைந்த
விடுதலைப் புலி நேரு!
மறைந்த ஆண்டுகள் மூன்று - ஆனாலும்
மறக்குமா என்றும் அவன் நினைவு!

கதிரிப்பாய், அச்சுவேலி. - குடும்பத்தினர்
நண்பர்கள்

2634)

அலுவலக ஊழியப் வேலையைப் பெரிதாக மதிக்கும் முத்துக்கிருஷ்ணன் தனது பேரப் பிள்ளைகளையும் தனது தொழிலிலேயே ஈடுபடுத்தப் போவதாக அழுத்தமாகக் கூறுகிறார்.

இன்றும் தொழில் நுட்பச் சந்தையில் முத்துக்கிருஷ்ணன் தன் இடத்தை இழக்கவில்லை. இதற்கு மேலாக இவரின் மூத்த மகன் அற்புத தேவன் (மாயவன் ஜூனியர்) இவரது இடத்தை நிரப்பி வருகிறார். முத்துக்கிருஷ்ணனின் தொழில் மயக் குடும்பமே - பிள்ளைகள் சொந்தத்தில் பட்டடைவைத்து தனித் தனித் திறன் தேவைப்படும் பல சிறு சிறு பணிகளாக நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு தொழில் செய்து வருகிறார்கள். தொழிலால் இப்போது வருமானம் இல்லை என்கிறார் முத்துக்கிருஷ்ணன். இந்த விவகாரத்தில் உண்மை இருக்கிறது என்றாலும் அது ஓரளவிற்கே பொருந்தும்.

---

சரித்திரமாய் அடையாளத்தை அழித்தும் தான் தமது உயிர்களைத்தக்க வைத்துக்கொள்ள வேண்டியது விதி என்றாகியது. எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்தும் - பெறுமதிமிக்க சொத்துக்களை இழந்தும் தமிழ் மக்கள் தமது தாயகப் பகுதிக்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தனைக்கும் மேலாக தென்னிலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பான புகலிடம் அல்ல என்பதைப்புரிந்துகொண்டு ஆட்சியாளர்களே, உங்கள் தாயகப்பகுதிக்கு விரைந்து செல்லுங்கள் என்பதுபோல தமிழ்மக்களை வடக்கிற்கும், கிழக்கிற்கும் அனுப்பி வைக்கலாயினர் அதுவும் தரைமார்க்கப் போக்குவரத்துக்கள் பாதுகாப்பானவையல்ல என்பதால் கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் மக்கள் அழுத கண்களோடும் வெதும்பிய உள்ளத்தோடும் தாயகக் கரைகளிலிறங்கி நிம்மதிப் பெருமூச்சை விட்டனர்.

**1975 ஜூன் 05**

காலம் காலமாக அடக்கப்பட்ட தமிழ்மக்கள் தொடர்ந்தும் அவ்வாறேயிருக்க சம்மதிக்க மாட்டார்கள் என்பதை காலம் உணர்த்தியது ஆயுதம் தாங்கி சிங்கள பௌத்த பேரினவாத அரசை எதிர்க்கத்திடசங்கற்பம் பூண்ட இளைஞர் சக்தி முகிழ்த்து எழுந்தது. இந்தப் போராட்டத்தின் திருப்புமுனை எனக் குறிக்கப்படக் கூடிய வகையில் உரும்பராய் மண்ணில் சிவகுமார் மலர்ந்தான். தலைக்கு விலை குறித்து சிங்களப் படையினரால் தேடப்பட்ட முதல் தமிழ் மகனான சிவகுமாரன் 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என்னும் முழக்கத்தின் மூலாதாரமானவன் - 'செய்து முடி அல்லது செத்துமடி' என்ற வேதத்தை ஈழத் தமிழ் இளைஞரின் உள்ளத்தில் ஊட்டியவன் தன்னைத் தற்கொடை செய்ததும் ஆனி ஐந்தாம் நாளில் -

ஆக ஆனி மாதத்தில் வரும் ஐந்தாம் நாள் என்பது தமிழ் மக்கள் தமது அடிமைத்தளையிலிருந்து விடுபட்டால் மட்டுமே அமைதியான வாழ்வைத் தொடரமுடியும் என்பதை எடுத்துக் கூறும் நாள் ஆகும். தாயகத்தின் விடுதலையை நிலை நாட்டுவதும், தமிழ் மக்களின் சுதந்திரத்தை நிலை நிறுத்துவதும் எத்துணை அவசியம் என்பதற்கு ஆனி ஐந்தாம் நாளின் சம்பவங்கள் ஒரு உரைகல் எனலாம். எனவே தான் ஆனி ஐந்தே வா என்று வரவேற்பு சொல்ல வேண்டியுள்ளது.

# போசாக்கு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் போசாக்குக் குறைவாக உள்ள சிறார்களுக்கு உடனடியாக போசாக்கு உணவு வழங்குவதற்கான போசாக்கு நிலையங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள 'கர்ப்பவதி, மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு போசாக்கும் பராமரிப்பும்' எனும் கருத்தரங்கு கடந்த 26 ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் இடம்பெற்றது.

மேற்படி கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது பகுதியில் உள்ள சுகாதார திணைக்களம் அரசாங்க அதிகாரியின் உத்தியோகத்தர்களுடனும் சமூகசேவைப் பிரதிநிதிகளுடனும் இணைந்து ஓர் அமைப்பை உருவாக்கி செயற்பட வேண்டும் எனவும் போசாக்கு குறைவாகவுள்ள சிறார்களுக்கு உடனடி பேறுள்ள போசாக்கு உணவை வழங்குவதற்கான போசாக்கு நிலையங்களை அமைக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இம் முடிவின் பிரகாரம் முதலாவது போசாக்கு நிலையத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமூக மருத்துவ பீடத்தின் உதவியுடன் கொக்குவிலில் ஆரம்பிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ் சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் தமும் ஓர் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தை யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைப்பதாக அறிவித்துள்ளது (ச)

---

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ் இராமநாதன் கல்லூரியிலும் யாழ் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் நடைபெற உள்ள க.பொ.த (சா.த) 1990 கர்நாடக சங்கீதம், நடனம் ஆகியவற்றின் செயல்முறைப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## தராசு விற்பனை

கீழே தரப்பட்ட புதிய தராசுகளும் படிகளும் விற்பனைக்கு உண்டு

| | |
|---|---|
| 'Union' Platform Weighing Scale | 25 Kg |
| 'Ishida' Table balances | - 2Kg & 8Kg Made in Japan |
| 'Salter' Hanging balance | - 100Kg |
| Pocket balance | - 5Kg Germany |
| Beam balances | - 1Kg, 02Kg, 05Kg and 10 Kg |


Limited Stock available

சகலவிதமான தராசுகள் பழுதுபார்த்து சீர்செய்து முத்திரையிட்டுக் கொடுக்கப்படும்.
( Repairing Servicing and Stamping )

**சாமுவேல் சன்ஸ்
அன் கொம்பனி லிமிட்டெட்**

206, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4490)


## 1-ம் ஆண்டு நினைவு நாள்



மானிப்பாய்
வடக்கைச் சேர்ந்த

அமரர்
முருகேசு
இளையதம்பி

தோற்றம்:
02 - 04 - 1917

மறைவு:
18 - 05 - 1991

தெய்வத்தின் திருவருளால் எங்கள் குடும்பத் தலைவராய் வாழ்ந்து எண்ணிலாக் கடமைகளால் எல்லோரது இதயத்திலும் மலர்ந்து இறவாப் புகழ் பெற்ற எங்கள் அன்புத் தெய்வம் இவ்வுலக வாழ்வை நீத்து ஆண்டொன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

உச்சியோடை லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

( 2636 )

# நாடு கடத்தப்படும் தமிழ் அகதிகள்

பலஸ்தீனர்களின் விடுதலைக்கான போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தபோது இஸ்ரேலைச் சுற்றியிருந்த நேசமான அரபு நாடுகள் தமது நிலப் பரப்பைப் பலஸ்தீனர்களின் பின்தளமாகப் பாவிப்பதற்கு ஒப்புக்கொண்டன. இந்நாடுகளில் ஜோர்தானும் ஒன்று. ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலத்தின் தொடர் நிலமாக இருந்தபடியால் ஜோர்தான் பலஸ்தீன விடுதலை இயக்கங்களின் பிரதான பின்தளங்களில் ஒன்றாக இருந்தது. ஜோர்தானின் கிழக்குக் கரையில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் பலஸ்தீனர்கள் அகதிகளாகத் தஞ்சம் கோரினர். ஜோர்தானின் இராணுவம் பலஸ்தீன போராளிகளுக்கு பயிற்சி அளித்து ஆயுத உதவிகளும் செய்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலத்தில் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது தளங்களை ஸ்தாபிப்பதில் பலஸ்தீனர்கள் பல பின்னடைவுகளை எதிர்நோக்கினர். எனவே அவர்கள் அநேகமாக பின்தளங்களில் தங்கியிருந்தனர். இவ்வாறு பின்தளமாக இருந்த அரபு நாடுகளின் அரசுகள் தமக்கிடையிலான முரண்பாடுகளுக்கேற்றாற்போல பலஸ்தீன விடுதலைப்போராளிகளைக் கையாளக்கூடிய வாய்ப்புக்களை பலஸ்தீனர்கள் தவிர்க்க விரும்பினார்கள். எனவே ஒருகாலமாகிலும் நிரந்தரமானதுமான ஒரு பின்தளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு அதிலிருந்து பலஸ்தீன தாயகத்தை விடுவிப்பது என்று அவர்கள் திட்டமிட்டார்கள். இதன்படி ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தின் தொடர் நிலமாக இருந்த ஜோர்தானில், ஏற்கனவே இருந்துவந்த மன்னர் ஆட்சியை அகற்றி அங்கு பலஸ்தீன விடுதலைக்கு எடபொருத்தமான இருக்கக்கூடிய 'புரட்சிகரமான அரசு' ஒன்றை அமைப்பதற்கு பலஸ்தீனர்கள் முயற்சிக்கலானார்கள். ஏற்கனவே ஜோர்தானின் பல நகரங்களில் பலஸ்தீனர்கள் குறிப்பிடத்தக்க அளவு பலத்துடன் இருந்தார்கள்.

ஜோர்தான் அரசர் ஹூசைன் புகலிடம்தேடி வந்த பலஸ்தீனர்கள் தமது சிம்மாசனத்துக்கு அச்சுறுத்தலாக வளர்வதை சகித்துக்கொள்ள தயாராக இருக்கவில்லை. அதோடு பலஸ்தீன இயக்கங்களில் சில பிரிவுகள் முன்வைத்த இடதுசாரிச் சிந்தனைகள் அவருக்கு எரிச்சலூட்டின. ஜோர்தானியர்களை மன்னர் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டும் பலஸ்தீனர்களை நசுக்குவதற்கு மன்னர் ஹூசைன் தயாரானார்.

1970 செப்டம்பரில் பலஸ்தீன விடுதலை இயக்கங்களின் தீவிரவாதம் என்று வர்ணிக்கப்பட்ட பி. எல். எவ். பி. மேற்கு நடுநிலைக்குச் சொந்தமான மூன்று பயணிகள் விமானங்களைக் கடத்திச் சென்று ஜோர்தானின் பாலைவனங்களில் தரையிறக்கியது. கடத்தல்காரர்கள் சிறையிலுள்ள தமது சகாக்களை விடுவிக்க கோரினர். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலேயே பயணிகள் விடுவிக்கப்பட்டனர். இச்சம்பவம் ஜோர்தான் அரசை மேற்குலகுடனும் இஸ்ரேலுடனும் நேரடியாக மோதவிடும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதாக மன்னர் ஹூசைன் கருதினார். எனவே பலஸ்தீனர்களிற்கு எதிராகத் தனது சட்டபூர்வமான பலம்மிக்க தனது இராணுவத்தை ஏவிவிட்டார்.

பலஸ்தீனர்கள் இவ்வாறுதான் அழைக்கிறார்கள் 'கறுப்புச் செப்டம்பரில்' ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் இடையிடையே தற்காலிக யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்டபோதும்1971 யூன்மாதகமளவில் பலஸ்தீனர்களை ஜோர்தானின் கிழக்குக் கரையிலிருந்து அகற்றும்வரை நீடித்தது. வெளியேற்றப்பட்ட பலஸ்தீனர்கள் சிரியவிலும், லெபனனிலும் தஞ்சம் புகுந்தார்கள். இம் மோதல்களில் 3000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் குறிப்புக்கள் கூறுகின்றன. 20,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன விடுதலை இயக்க வட்டாரங்கள் கூறுகின்றன. [இச்சம்பவங்களோடு சீர்குலைந்த ஜோர்தான்- பலஸ்தீன உறவுகள் கிட்டத்தட்ட இரு தசாப்தங்களின் பின்னரே ஓரளவிற்குச் சீரடைந்தன]

ஜோர்தானில் பலஸ்தீனர்களிற்கு ஏற்பட்ட அதே அநுபவம் என்று சொல்ல முடியாது எனினும் அதை ஒத்ததானவை என்று சொல்லக்கூடிய கசப்பான அனுபவங்கள் இன்று இந்தியாவில் இலங்கைத் தமிழர்களிற்கு ஏற்பட்டுள்ளன.

83 யூலைக் கலவரத்தின்பின் எல்லாத் தமிழ் இயக்கங்களிற்கும் தமிழ்நாடு பின்தளமாகியது. உத்தரப்பிரதேசத்திலும், புதுடில்லியில் இராமகிருஷ்ணபுரம், புதுடில்லி விமானநிலையம் போன்ற சில இடங்களிலும் ஓய்வு பெற்ற இந்திய இராணுவத்தினர் தமிழ் இயக்கங்களிற்கு முதலாம் கட்ட இராணுவப் பயிற்சியை அளித்தனர் தொடர்ந்து தமிழ்நாட்டில் இயக்கங்கள் தங்களின் சொந்த பயிற்சித் தளங்களை ஆரம்பித்தன. புதுடில்லி இயக்கங்களிற்கு ஆயுதமும் நிதியும் தந்தது.

அன்று எல்லா இயக்கங்களையும் இந்தியர்கள் 'விடுதலைப் புலிகள்' என்றே அழைத்தார்கள் (பின்னர் இந்தியபடைக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டபோது, இந்தியாவிற்கு ஆதரவான இயக்கங்களையும் புலிகளையும் வித்தியாசப்படுத்தும் நோக்கத்தோடு இந்திய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் புலிகளின் ஆங்கிலச் சுருக்கமான எல்ரிரிஈயை திட்டமிட்டு உபயோகிக்கலாயின) குறிப்பாக விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டின் உள்அரசியலில் தலையிடாக்கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள பிரிவினைவாதிகளுடனோ, நக்சலைட்டுக்களுடனோ தொடர்புகள் எதையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை தமிழக சிறப்புப் புலனாய்வுப் பிரிவான கியூ பிரஞ் இந்த விசயத்தில் மற்றைய இயக்கங்களோடு ஒப்பிடுகையில் புலிகளின் கட்டுப்பாட்டைக் குறித்து திருப்தியுடனிருந்ததாகச் சொல்லப்படுகிறது புலிகள் பலஸ்தீன விடுதலை இயக்கங்களைப்போல (தமிழ்நாட்டில்) பின்தளத்தில் முழுவதும் தங்கியிருக்கவில்லை. பின்தளம் பொறிந்தாலும் தாய் நிலம் எப்பொழுதும் பாதுகாப்பானதும், கௌரவமானது என்ற கருத்து புலிகளிடம் ஆரம்பத்திலிருந்தே காணப்பட்டது.

தமிழ் அகதிகள் விசயத்தில் அன்று புதுடில்லியும் தமிழ்நாடும் அகதிகளை பொன் முட்டையிடும் வாத்துக்களாக பராமரித்தன இலங்கைக்கெதிரான எந்த ஒரு பிரசாரத்தின் போதும்புதுடில்லி தமிழ் அகதிகளையே சுட்டிக்காட்டியது 1987 இல் ராஜீவ் - ஜே ஆர் உடன்படிக்கைஉருவானதோடு தமிழ் அகதிகளுடனான இந்தியாவின் முதலாவது அத்தியாயம் முடிவுக்கு வந்தது பின்னர் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கழித்து இரண்டாவது ஈழப்போரின் அகதிகள் தமிழ்நாட்டை நோக்கிப் போனார்கள் ஒப்பீட்டளவில் முதலாம் ஈழப்போரின் அகதிகளை விடவும் மிகக்குறுகிய காலத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான அகதிகள் தமிழ் நாட்டில் புகலிடம்கோரினர். திரு ராஜீவ்காந்தி கொல்லப்படும் வரை இவர்களின் நிலைமையில் பெரிய மாறுதல்கள் எதுவும் நிகழவில்லை ஆனால் ராஜீவின்மரணத்தைத் தொடர்ந்து எதிர்க்கட்சி களற்றவலிமைமிகுந்த முதலமைச்சராக ஜெயலலிதா உருவாகினார் பதவியேற்றதும் அவர் உடனடியாக புலிகளிற்கு எதிராகப்பிரகடனம் செய்யப்படாத யுத்தம் ஒன்றை ஆரம்பித்தார்.

முதலில் புலிகளிற்குஎதிராக ஆரம்பித்து. பின்னர்புலிகளின் உள்ளூர் ஆதரவாளர்களை நோக்கித் திரும்பிய யுத்தம் இறுதியாக தமிழ் அகதிகளை நோக்கி விஸ்தரிக்கப்பட்டது

ஜெயலலிதா புலிகளிற்கு எதிரான யுத்தத்தில் தன்னை ஒரு புலிகளின் நிரந்தர எதிரி ஆக்கிக்கொண்டார் அவரும் அவருடைய பிராமண ஆலோசகரும் புலிகளின் நிரந்தர எதிரியுமான 'சோ' ராமசாமியும் சந்தேகத்திற்குரிய கடைசி இலங்கைத் தமிழனை

**நிலாந்தன்**

யும் தமிழ்நாட்டிலிருந்து அகற்றும் வரை தங்களிற்கு பாதுகாப்பில்லை என்று நம்புகிறார்கள். எனவே தமிழ் அகதிகளை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை, கர்நாடகத்தின் ஐயங்கார் பிராமண வகுப்பைச் சேர்ந்தவரான ஜெயலலிதாவிடமிருந்தே முதலில் எழுந்தது.

இந்திய உள்துறை அமைச்சும் ஜெயலலிதாவைப் பின்பற்றியே சிந்திப்பது போல் தெரிகிறது. இப்போது புலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளதால் புலிகளும் புலிகளின் தமிழ்நாட்டு ஆதரவாளர்களும் தமிழ்நாட்டில் தலைமறைவு அரசியலில் (Under Ground P0litics ஈடுபட முடியும் எனறும் இதற்குரிய ஆரம்பமையங்களாக அகதிமுகாம்கள் அமையக்கூடும் என்றும் புதுடில்லி கருதுவது போல் தெரிகிறது. மேலும் புலிகள் தடைசெய்யப்பட்டுள்ள தமிழ் நாட்டில் புலிகளிற்கு ஆதரவான உணர்வலைகளை தோற்ற வைக்கக் கூடிய நொதியங்களாகத் தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் தொழிற்பட முடியும் என்றும் புதுடில்லி அஞ்சக்கூடும். எனவே அகதிகளைத் திருப்பி அனுப்புவது தவிர்க்க முடியாதது என்றே இந்திய உள்துறை அமைச்சு கருதுகிறது முதலில் கப்பல்களில் அனுப்பப்பட்ட அகதிகள் பின்னர் கப்பல்கள் பழுதடைந்து விட்டதால் இப்போது விமானங்களில் அனுப்பப்படுகிறார்கள்.

கொழும்பில் கடந்த வருடம் நடந்த சார்க் மாநாட்டின் பின் புதுடில்லியில் இந்திய - இலங்கை அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம் காணப்பட்ட விவகாரங்களில் அகதிகளைத் திருப்பி அனுப்புவதும் ஒன்று என்று சொல்லப்படுகிறது அகதிகளைத் திருப்பப் பெறுவதில் கொழும்பு அதிகம் அக்கறையுடனுள்ளது. ஏனெனில் அகதிகளைத் தமிழ்நாட்டிலிருந்து அகற்றுவதின் மூலம் இனப் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டிற்கான வாய்ப்புக்களை மேலும் குறைக்க முடியும் என்பதோடு தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயல்பு நிலைமை திரும்பி விட்டதாகப் பிரசாரம் செய்யவும். அகதிகளின் பெயரால் வெளிநாட்டு உதவிகளைப் பெறவும் முடியும்.

முதல் தொகுதி அகதிகள் திருகோணமலையை நோக்கி வந்து கொண்டிருக்கும்போதே குச்சவெளிக்கு அருகில் புலிகளின் அதிரடிக்கு இலக்காகி 20 சிப்பாய்கள் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து சீனன்குடா விமானத் தளத்தில் மோசமானதொரு வெடி விபத்து ஏற்பட்டது. சீனன்குடாவிலிருந்து எழுந்த கரும்புகையைக் கப்பலிலிருந்தபடி அகதிகள் கண்டார்கள் யுத்தத்திலிருந்து தப்பிச் சென்ற அவர்களைப் பொறுத்தவரை இவ்விரு சம்பவங்களும் துர்க்குறிகளாகவே தோன்றின அகதிகள் உப்புவெளியில் உள்ள இரு ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டனர் அநேகமயம் திருகோணமலையில் தமது வதிவிடங்களில் நிலவும் பதற்றம் காரணமாக இடம் பெயர்ந்து தற்காலிகமாகக் கிளப்பன் பேர்க் முகாமில் தங்கியிருந்த 11,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் இலங்கை அரசு தங்களைத் திரும்பக் குடியமர்த்துவதற்கு ஆவன செய்யாமல் புதிதாகவும் அகதிகளை வரவேற்கிறது என்று ஆத்திரப்பட்டார்கள். அகதிகள் கடல் கடந்த ஒரு அகதிமுகாமிலிருந்து இங்கு இன்னொரு அகதிமுகாமிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. இச்சம்பவத்தை இந்தியர்கள் 'நாடு திரும்புதல்' என்று சொல்ல விரும்பினாலும் சரியான அர்த்தத்தில் சொல்வதானால் இது ஒருவகையான நாடு கடத்தும் செயலே.

இந்த இடத்தில் 80 களின் முற்கூறில் இந்திரா காந்தி கூறியதை நினைவு கூரலாம். அப்போது தமிழ்நாட்டில் பயிற்சி முகாம்கள் இருப்பதாகக் கொழும்பு புதுடில்லியைக் குற்றஞ்சாட்டியது. அதற்குப் பதிலளித்த இந்திரா காந்தி தமிழ்நாட்டில் பயிற்சி முகாம்கள் இல்லை. அகதி முகாம்களே உண்டு என்று சொன்னார் அன்று பயிற்சி முகாம்களை அகதி முகாம்களின் பின்னால் மறைக்கப் புதுடில்லியால் முடிந்தது. ஏனெனில் அன்று புதுடில்லியின் பாத்திரம் 'தமிழர்களிடம் பரிவுடைய நடுவர்' என்பதாக இருந்தது. இன்று நிலைமை அவ்வாறில்லை. இலங்கையில் போரில் ஈடுபடும் இரு சாராருமே புதுடில்லியின் நடுவர் பாத்திரத்தை சந்தேகத்தோடு நோக்குகிறார்கள். குறிப்பாகத் தமிழர்களைப் பொறுத்தவரை தன்னுடைய நடுவர் பாத்திரத்தை நிராகரித்து விட்டதை உணர்ந்து கொண்ட புதுடில்லி அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்புகிறது. தமிழ் அகதிகளை விரும்பத்தகாதவர்களைப் போல நாடுகடத்தும் விவகாரத்தை இந்தப் பின்னணியில் வைத்தே புரிந்து கொள்ள வேண்டும்.

## கலை விழா

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் தீவகப் பிரிவு நடாத்தும் கலைவிழா 7-6-92 ஞாயிறுகிழமை இரவு அரியாலை திறந்தவெளியரங்கில் நடைபெறும் தீவக கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு குமணன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகளும் பல கலை நிகழ்ச்சிகளும இடம்பெறும்.

மேற்படி விழாசென்றமாதம் 31-ம் திகதி நடைபெறவிருந்து பின்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (22)

## புனரமைப்பு

ஈச்சங்குளம்-பூவரசன்குளம் காட்டுப்பாதை பெருந்தொகை பணம் செலவில் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

பேயாடிகூளாங்குளம் பகுதி வரை இராணுவம் நிலைகொண்டிருப்பதனால், கிராமப்புறங்களிலிருந்து, யாழ் வீதி நோக்கி வாகனங்கள் செல்வதற்கு உருப்படியான பாதையில்லை. இதனால் வாகனக்காரர் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இதனை அடுத்து வவுனியா மாவட்ட அத்தியாவசிய சேவைக்குழுவினர் இப்பாதை புனரமைப்பு வேலையை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் இந்த வீதி திருத்தும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (தி)

### பாடசாலை ஆசிரியர்களுக்கு

## ஓய்வூதியத்தகைமையுடன் நியமனம் வழங்கப்படும்

தோட்டப்பாடசாலைகளை சுவீகரிக்கும்போது, 45 வயதுக்குமேற்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியத் தகைமையற்ற நியமனத்தை ஓய்வூதியத்தகைமையுடைய நியமனமாக மாற்றி அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளருக்கு கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு எ. எஸ். வீராடஸ் தெரிவித்துள்ளார். தோட்டப் பாடசாலைச் சேவையை ஓய்வூதியம் பெறுவதற்கு சேர்த்துக்கொள்வதென அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை கடந்த இரண்டு வருடத்திற்கு மேலாக தாமதப்படுத்திவந்துள்ளமையை சங்கம் சுட்டிக்காட்டி உடன் நடவடிக்கையாக தோட்டப்பாடசாலைகளைச் சுவீகரிக்கும் போது 45 வயதுக்குமேற்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியத்தகைமையற்ற நியமனத்தை ஓய்வூதியத் தகைமையுடைய நியமனமாக மாற்றுவதற்கு, அவர்களின் முதல் நியமனத்தை தோட்டப்பாடசாலையில் சேர்ந்த திகதியாக மாற்றுவதற்கும் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றதாகவும், தெரிவித்த ஆணைக்குழுவின் செயலாளர் இவ்வாசிரியர்களின், வயது, தோட்டப்பாடசாலையில் முதல் நியமனத்திகதி, அடிப்படைகல்வித்தகைமைபோன்ற தகவல்களை அவர்களின் சுயவிபரக் கோவையைப் பார்வையிட்டு, சிபார்சு செய்து அனுப்புப்படி சம்பந்தப்பட்ட கல்விப்பணிப்பாளர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் பணிப்பாளர்களின் சிபார்சு கிடைக்கப் பெற்றதும் இவர்களுக்கு ஓய்வூதியத்திற்காக தோட்டப்பாடசாலைச்சேவையையும் கணித்துக் கொள்ளும் படிபணிப்புகள் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படுமெனவும சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் தெரிவித்துள்ளதோடு. பணிப்பாளருக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தின் பிரதியையும் கையளித்துள்ளார்.

முதற்கட்ட நடவடிக்கை முடிந்ததும். அடுத்த கட்ட நடவடிக்கையாக எஞ்சிய ஆசிரியர்களின் தோட்டப்பாடசாலைச் சேவையையும் ஓய்வூதியத்திற்காக சேர்த்துக் கொள்வதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமெனவும் ஆணைக்குழுவின் செயலாளர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக. பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

# அசாம் கிளர்ச்சியாளரை ஒடுக்க பூட்டானுக்குள் இந்தியப்படை

(டில்லி)

'போடோ' ஆதிவாசி கிளர்ச்சி வாதிகளது கெரில்லா நடவடிக்கைகளை ஒடுக்க இந்திய அரசாங்கம் தனது அயல் நாடான பூட்டானுக்கும் தனது படைகளை அனுப்பி வைத்துள்ளது.

நேற்று முன்தினம் பூட்டானுக்குள் இப்படைகளை அனுப்பி வைத்ததாக இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ஆதிவாசி போடோ கிளர்ச்சிவாதிகள் பூட்டானுக்குள் தளம் அமைத்து இயங்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் மீதான தடை கருணாநிதியின் கருத்து

(கொழும்பு)

லாயத்தை விட்டு குதிரை வெளியேறிய பின்னர் பூட்டுப் போடப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் இயக்கத் தடைகுறித்து கருத்து வெளியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இத் தகவலை கொழும்புப் பத்திரிகையான தினகரன் வெளியிட்டுள்ளது.

## அகதிகளை அனுப்புவதில் இந்தியா விடாப்பிடி

(கொழும்பு)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இரு வாரத்தில் மீண்டும் இலங்கைக்கு விமானத்தில் திருப்பி அனுப்ப இந்தியா முடிவு செய்துள்ளது. இவ் அறிவித்தலை இந்தியத் தூதரகம் விடுத்துள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் திலக் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஏற்கனவே 23,109 தமிழர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் 15,730 பேர் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார்த்தீவு, திருக்கோணமலை ஆகிய பிரதேசங்களில் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் மீதியானோர் விரைவில் குடியமர்த்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாதம் 2 ஆம் திகதி விமானம் மூலம் வரவிருந்த அகதிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும், இவர்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படுவர் என்றும் இந்தியஉயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளதாகவும் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு ஊழியருக்கு புனர்வாழ்வு நிதி வழங்குக

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர்களுக்கு புனர்வாழ்வு நிதி வழங்கும்படி கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் அரசாங்கத்தை ஒரு வருடமாக கோரியிருந்தும் இந்நிதி கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது அரச ஊழியர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. நாட்டின் இக்கட்டான நிலைமையிலும் தம் சேவையினை மேற்கொண்டுவரும் சிற்றூழியர்களுக்கு மிகவும் குறைந்தஅளவிலானசம்பளமே வழங்கப்படுகிறது. எனவே இவர்களுக்கு புனர்வாழ்வு நிதி வழங்குப்படி யாழ் அரச அதிபரையும் மாகாணசபை மற்றும் கூட்டுறவு மந்திரி ஆகியோரையும் கடந்த ஒரு வருடகாலமாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிவருகிறது. இந் நிதி வழங்குவதில் பொறுப்பான அதிகாரிகள் அக்கறை இல்லாது இருக்கின்றனர் என தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (பா)

## சாந்தனின் இன்னிசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

"இந்த மண் எங்களின் சொந்த மண்" புகழ் சாந்தன் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நாளை யாழ்.நாயன் மார்கட்டு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சனசமூக நிலையத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறவிருக்கும்விழாவில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிலைய மைதானத்தில் காலை 6-00 மணிமுதல் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இருக்கின்றது. மாலை நிகழ்ச்சிகளாக நடனம், நாடகம், இசைநிகழ்ச்சி ஆகியவை நடைபெற இருக்கின்றது.

இவ்விழாவில் யாழ்.மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம். திரு. நடராசா, அரியாலை பிரதேசப் பொறுப்பாளர் திரு சிராளன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

## குமணவில் 286 தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பவில் 286 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகள் இன்று யாழ் பிரதான தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டு இன்று தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என யாழ்தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## தாழையடி கடற்பரப்பில் கடற்படைக்கப்பல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படையின் தாய் கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை காங்கேசன்துறைப் பக்கத்திலிருந்து வந்த இக் கப்பல் தாழையடிக்கு நேரே நங்கூரமிட்டது.

இக்கப்பலுடன் இரண்டுசிறிலங்கா கடற்படையின் விசைப் படகுகளும் அப் பகுதியில் காணப்படுகின்றன.

விசைப்படகுகள் அப்பகுதிக் கடலில் அடிக்கடி ரோந்து செல்வதினால், கடற்றொழிலாளர்களின் தொழில் பாதிப்படைந்துள்ளது.

கடலில்தொழிலுக்குசென்ற மீனவர்கள் சிலர் இம்சிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

## தியாகி சிவகுமாரனின் 18ஆம் ஆண்டு நினைவுநாள்

உரும்பராய் தியாகி பொன் சிவகுமாரனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாளான இன்று காலை 9.00 மணியளவில் உரும்பராய் ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலையத்தில் தியாகி பொன் சிவகுமாரனின் திருஉருவப்படம் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களால் திரைநீக்கம் செய்யப்படும். பகல் 11.00 மணியளவில் வேம்பன் மயானத்தில் உள்ள அன்னாரது சமாதியில் மலர் அஞ்சலியும் மாலை 6.00 மணிக்கு தியாகி பொன் சிவகுமாரனின் சிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களால் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும். அஞ்சலிக் கூட்டம் மாலை உரும்பராய் சைவ தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர் அதனைத் தொடர்ந்து கலை பண்பாட்டு கழகத்தினரின் கலை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

### க.பொ.த. சாதாரணம்

## செய்முறைப் பரீட்சை அனுமதி அட்டைகள்

[யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர [சாதாரண தர] பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய கர்நாடக சங்கீத, பரதநாட்டியபாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைகள் முறையே யாழ்.வேம்படி மகளிர்கல்லூரியிலும், யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கானபரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

தீவகம், கரைநகர், தெல்லிப்பழை, மல்லாகம், காங்கேசன்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [பா]

### முஸ்லிம்களின்

என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவில்லை.

இதேவேளை ஆறு மீனவர்களது சடலங்கள் கரையொதுங்கியுள்ளன வெலிக்கந்தையிலிருந்து ரயில் பொலிஸ் பாதுகாப்புடன் வந்தபோதும் கூட வாழைச்சேனை புகையிரதநிலையத்தை அடைந்ததும் முஸ்லிம் காடையர்கள் தமிழ் மக்கள் மீது அடாவடித்தனம் அட்டூழியம் புரிகின்றனர்.

படுகொலைகளைப் புரிந்த ஊர்காவல் படையினரை தமிழ் மக்களால் அடையாளம் காணப்பட்டும்கூட அவர்களுக்கெதிராகப் பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அப்பாவிகளான இரு தமிழ் ஆசிரியர்கள் தீவிரவாதத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற போலித்தகவலில் தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். நகரில்

திருஞானசம்பந்தர் ஆதீனம், இலங்கைத் திருச்சபை, வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். இலக்கிய வட்டம், கலை இலக்கியக் களம், அகில இலங்கை கம்பன் கழகம், தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவை உட்பட பல்வேறு அமைப்புக்களும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளன.

இதேவேளை சகல சாரணர்கள், திரிசாரணர்கள் சென் ஜோன் அம்புலன்ஸ், முதலுதவி பாடசாலை, வெளிப்படைப் பிரிவுகளும், தாதிகள் பிரிவும், பெண்கள் சாரணிய வழிகாட்டிகளையும் இன்று காலை 8-30 மணிக்கு நல்லை ஆதீனத்திற்கு அருகில் சீருடையுடன் கூடுமாறு அப்பிரிவு சார்ந்த ஆணையாளர்கள் அறிவித்துள்ளனர்.

### தேர்தல் தொகுதி

இது தொடர்பாக ஆலோசனைகளை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதே வேளை ஐ தே. கட்சியும் அதன் எம்பிகளுக்கு இது பற்றி அறிவித்து அவர்களது யோசனைகளையும் கோரியுள்ளது.

### வீரச்சாவு

சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் விழுப்புண் பெற்றிருந்த வீரவேங்கை ஜீவராணி (யூட்டின் ஜேம்ஸ், டாக்டர் ஜேம்ஸ், கொண்டன் றோட், இலவாலை) என்னும் போராளி 03-06-1992 அன்று வீரச்சாவு அடைந்தார்.

#### 2 ஆம் லெப்டினன்ட் தேவன்

04-06-1992அன்று தெல்லிப்பழையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் குறிபார்த்துச்சுட்டதில் 2-லெப்டினன்ட் தேவன் (ராஜ் கந்தசாமி மகிழ்ராஜ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்)என்னும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

#### வீரவேங்கை பாண்டியன்

04-06-1992 அன்று பி.ப. 3.30 மணியளவில் தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலால் வீரவேங்கை பாண்டியன் (ஞானசிங்கம் கனகசிங்கம், வீரபத்திரர் ஆலயம், ஏழாம் வட்டாரம், முனைக்காடு, மட்டக்களப்பு) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சிலாவத்தை

ணுவ உபகரணங்கள் பலவற்றை எடுத்துள்ளனர்.

மினி மினி எல் எம்.ஜி மேலதிக சுடுகுழல்-02 5.56 தொடர்ரவைகள்-1192, தண்ணீர்கான் கோல்சர்-01, ஏ.கே.எல்.எம்.ஜி கோல்சர்-01, கிற்பாக்-01, தலைக்கவசம்-01

### இராணுவ

சிறிலங்கா இராணுவத்தினரின் குறிக்கோள்களும் இதனால் தோல்வியடைந்தது.

இந்நிலையில், தொடரும் இராணுவ நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தமுடிவெடுக்கப்பட்டிருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### க. பொ. த

வும், ஆறு முதல் எட்டுப் பாடங்களுக்கு 50 ரூபாவும் பரீட்சை கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 30ஆம்திகதி ஆகும். பாடசாலைப் பரீட்சார்த்திகள்பாடசாலைகளினூடாகவிண்ணப்பிக்க வேண்டும்

### இராணுவத்தின்

கொண்டு செல்கையில் அடையாளம் காணாத கடமையிலிருந்த இராணுவத்தினர் ஒருவர் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யவே இவர் விதலத்திலேயே கொல்லப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் அமிர்தம்மா

பாஷையூரைச் சேர்ந்த அருளானந்தம் அமிர்தம்மா அவுஸ்திரேலியாவில் 3. 6. 92ல் காலமானார்.

இவர் காலம் சென்ற லோப்பு அருளானந்தத்தின் (சங்கிலித்தாம்) அன்பு மனைவியும், அருட்செல்வி மேரி தியோபான் (அதிபர். யாழ். கன்னியர் மடம்) காலம் சென்ற திருமதி பார்பரா பிலிப், கனிஷியஸ் நேரியோ (Australia), கிளிமெற் நேரியோ, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்றஏரோனி பிலிப்(D.F E O) கனிஷியஸ் ராசாத்தி, கிளிமெற் வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், அருள் (Australia), ராஜன் (France) றஞ்சன் (Australia). திருமதி பவானி அருள் மேரிதாஸ் (Australia) ரவி(U.K ) செல்வி எமா குயினி, லோகன், சீலன், தேனகா, டினோஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அஜே, அனோஜ், ஆகியோரின் அன்புப்பூட்டியாரும், காலம் சென்ற ச இராயப்பு காலம் சென்ற ச. பறுனாந்து ச. ஏபிரகாம் (இளைப்பாறிய ஆசிரியர்) ச. கலாசியோன் (இளைப்பாறிய உதவி வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்கான திருப்பலி இன்று (5. 6 92) காலை 9 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்

பார்பரா இல்லம்
20. புனித அந்தோனியார்வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்

தகவல்
அருட்செல்வி
தியோபான் H. F

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம்ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது